People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
# 12.04.2009 முதல் 18.04.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 94. | 11.04.09 | **மதுரை மாவட்டம்:** மலைவாழ், பழங்குடியினர் மக்களுக்கு இனச் சான்றிதழ் வழங்காததால் அம்மக்களின் வாழ்நிலை கேள்வி குறியாக உள்ளது. இம்மக்கள் இனச் சான்றிதழ் கேட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடுவது உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 95. | 12.04.09 | **மதுரை மாவட்டம்:** எம்.கே.புரம் முத்தையா கம்பவுண்டர் சேர்ந்த ஜெய்சங்கர் மனைவி கனிமொழிக்கும் தத்தனேரியைச் சேர்ந்த மணி என்பவருக்கும் இடையே தகராறு இருந்து வந்துள்ளது. இந்நிலையில் சம்பவத்தன்று இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில் கனிமொழிக்கு அரிவாள் வெட்டு விழுந்துள்ளது. இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 96. | 12.04.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் அருகே வேடர்புளியங்குளத்தை சேர்ந்த சரவணசுந்தரம் மனைவி அபிராமி. சரவணசுந்தரம் தனது பெற்றோர் பேச்சை கேட்டு அபிராமியை அடித்து தாய் வீட்டிற்கு அனுப்பி விடுவார். சம்பவத்தன்று பக்கத்து வீட்டிற்கு சென்று திரும்பிய அபிராமியை சரவணசுந்தரம் அடித்து அபிராமியின் புத்தகங்களை எரித்துள்ளார். இது பற்றி அபிராமி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 97. | 12.04.09 | **சிவகங்கை மாவட்டம்:** சாமியப்பட்டியை சேர்ந்த ஆதி மகள் தனலெட்சுமி அசோக்குமாரை காதலித்து கர்ப்பமாக்கி விட்டு திருமணம் செய்ய மறுத்து விட்டு வெளிநாடு சென்று விட்டார். இது குறித்து தனலெட்சுமி போலீசில் புகார். வெளிநாட்டில் இருந்து வந்த அசோக்குமாரை காவலர் பேசி திருமணம் செய்து வைத்துள்ளனர். இந்நிலையில் தனலெட்சுமியை அசோக்குமார் கொலை செய்துள்ளார். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 98. | 12.04.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** கோவில்பட்டி அருகே உள்ள கழுகுமலை கே. ராமநாதபுரத்தை சேர்ந்த கருப்பசாமி மனைவி காமாட்சி மகள் +2 படித்து வந்த தனலெட்சுமியை 22.11.08 அன்று பள்ளிக்கு சென்றவர் வீடு திரும்பவில்லை. இது குறித்து பலமுறை போலீசில் புகார் இல்லாததால் கோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 99. | 12.04.09 | **சென்னை மாவட்டம்:** இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்து மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் சார்பில் 14.04.09 அன்று போராட்டம் நடைபெற்றது. | இலங்கை மக்களுக்கு எதிரான பிரச்சனை | தமிழ்ஓசை |
| 100. | 12.04.09 | **திருப்பூர் மாவட்டம்:** பல்லடம்–மங்களம் சாலையில் இருக்கும் உன்னிகிருஷ்டிணம் மனைவி பிந்து இருவருக்கும் ஏற்பட்ட குடும்பத் தகராறில் பிந்து மண்ணெண் ஊற்றி தீக்குளித்தார். இதை பார்த்த உன்னிகிருஷ்ணன் தானும் தீக்குளித்தார். பிந்து உயிரிழந்தார். உன்னிகிருஷ்ணன் மருத்துவமனையில் அனுமதி. போலீசார் வழக்கு பதிவ செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 101. | 12.04.09 | **தேனி மாவட்டம்:** போடி தாலுகா சிலமரத்துப்பட்டியைச் சேர்ந்த ராமராஜ் மகள் மாலா வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் களப் பணியாளராக பணி புரியும் இவர் 11.04.09 அன்று கிராமத்திற்கு அருகே எரிந்த நிலையில் கிடந்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 102. | 12.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** திருச்சுழி அருகே இராசகோபாலபுரத்தை சேர்ந்த தாவீது மகன் சுரேஷ் (14) சுரேஸ் தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும் இவர் கை உடைந்து விட்டது. இந்நிலையில் சித்த மருத்துவமனையில் மருத்துவம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் 4 நாட்கள் கழித்து சுரேஷ் கை அதிக வலி ஏற்பட்டதால் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதில் சுரேஷ் கை எடுக்கப்பட்டது. இது குறித்து தாவீது போலிசில் புகார். | தவறான சிகிச்சை | தமிழ்ஓசை |
| 103. | 12.04.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** ஒட்டப்பிடாரத்தை அடுத்த குறுக்கு சாலையைச் சேர்ந்த கிருஷ்ணசாமி மனைவி முத்துமாரியை அவரது கணவர் மற்றும் சகோதரர் உறவினர்களுடன் கிணற்றில் தள்ளி பின் எரியூட்டியுள்ளனர். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 104. | 12.04.09 | **கோவை மாவட்டம்:** மதுக்கரை பகுதியில் கேரளாவிற்கு கடத்தவிருந்த மணலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஞானவேல் தலைமையிலான குழு கைப்பற்றியது. | மணல் கடத்தல். | தமிழ்ஓசை |
| 105. | 12.04.09 | **மதுரை மாவட்டம்:** கேரளா மாநிலம் பாலக்காட்டை சேர்ந்த இராசன் மதுரை கரிமேட்டில் நடந்த கொலை வழக்கில் மதுரை சிறையில் தண்டனை பெற்று வந்தார். இவர் சிறை விடுப்பில் பழனியில் அக்கா வீட்டில் இருந்த பொழுது விஷம் குடித்து தற்கொலை | சிறை கைதி மரணம் | தமிழ்ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்து கொண்டார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 106. | 12.04.09 | **நீலகிரி மாவட்டம்:** குன்னூர் பகுதியில் உள்ள சிம்ஸ் பூங்கா சுற்றுலாவிற்கு வந்த பெண்களை அப்பகுதியில் உள்ள சுற்றுலா வந்த இளைஞர்கள் குடிபோதையில் பெண்களிடம் சில்மிஷம் செய்துள்ளனர். இது பற்றி பெண்கள் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 107. | 13.04.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனி தாலுகாவைச் சேர்ந்த சாமிநாதபுரம் அருகே உள்ள குமாரபாளையத்தை சேர்ந்த செந்தில்குமார் மனைவி ராதா (22). செந்தில்குமார் மனைவி ராதாவுக்கும் இடையே அடிக்கடி குடும்பத் தகராறு இருந்து வந்துள்ளது. சம்பவத்தன்று செந்தில்குமார் ராதா மீது சந்தேகப்பட்டு பிரச்சனை செய்துள்ளார். இந்நிலையில் ராதாவை அரிவாளால் வெட்டி கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 108. | 13.04.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பாலை அன்பு நகரைச் சேர்ந்த காந்தி மகள் அனிதாவை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணைக் கேட்டு சித்திரவதை செய்துள்ளனர். இது பற்றி அனிதா போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 109. | 13.04.09 | **மதுரை மாவட்டம்:** திருநகர் அருகே உள்ள தோப்பூரைச் சேர்ந்தத பிரபாகரன் மனைவி இந்து (32). இருவருக்கும் இடையே குடும்பத் தகராறு இருந்துள்ளது. இந்நிலையில் சம்பவத்தன்று இந்துவை பிரபாகரன் அரிவாளால் வெட்டியுள்ளார். இது பற்றி வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| 110. | 13.04.09 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் அருகே உள்ள கல்லனை சேர்ந்த பூரணம் தனது உறவினர்களுடன் திரையரங்கு சென்றிருந்தார். அங்கு இடைவேளையில் வெளியே சென்ற பூரணம் மற்றும் உறவினர்களை 2 இளைஞர்கள் தாக்கியுள்ளனர். இது பற்றி போலீசில் புகார் வழக்கு பதிவு. | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| 111. | 13.04.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** மானூர் அருகே உள்ள சமத்துவபுரத்தை சேர்ந்த சங்கர் மனைவி இசக்கியம்மாள். சங்கர் பெற்ற கடனால் அவமானம் தாங்க முடியாமல் இசக்கியம்மாள் தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 112. | 13.04.09 | **மதுரை மாவட்டம்:** குராயூரைச் சேர்ந்த ஈஸ்வரபாண்டி மனைவி தனலெட்சுமி (32). திருமங்கலம் அருகே பஸ்சை வழிமறித்து தாக்கி கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியதுடன் | | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | விசாரணைக்கு சென்ற போலீஸ் சப்–இன்ஸ்பெக்டரை சிறை பிடித்துள்ளனர். இது பற்றி வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 113. | 14.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் மங்காபுரம் கள்ளர் அரசு தொடக்கப்பள்ளி மாணவர்கள். தொடக்கப்பள்ளி இடிந்த நிலையில் மேற்கூரை இல்லாமல் சுகாதாரமற்ற நிலையில் திறந்த வெளியில் பள்ளிக்கூடம் செயல்படுகிறது. மேலும் மின்வசதி போன்ற அடிப்படை வசதி இல்லை. சத்துணவு வெளியில் சமைக்கப்படுவதால் சுகாதாரமற்ற நிலையில் உள்ளது. | பள்ளி வன்முறை | தமிழ்சுடர் |
| 114. | 14.04.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானல் டர்னாபுரத்தை சேர்ந்த செல்வம் மகள் சுதா (18). செல்வம் பழனியை சேர்ந்த சாமியார் அசோக்ஜி குடும்பத்தில் ஒருவராக பழகிய அசோக்ஜி செல்வத்தின் மகள் சுதாவை கடத்தி சென்றுள்ளார். இது பற்றி செல்வம் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 115. | 14.04.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் ரேஷன் அரிசி கடத்தி வந்த லாரி ரிப்பேர் ஆனதால் அரிசி மூட்டைகள் வேறு லாரிக்கும் மாற்றும் போது 2 லாரிகளும் போலீசாரால் பிடிப்பட்டது. | ரேஷன் அரிசி கடத்தல் | தினமலர் |
| 116. | 14.04.09 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி தாலுகா, பூதிபுரம் கிராமத்தை சேர்ந்த தலித் மக்களுக்கும், ஆதிக்க சாதியினருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையில் தலித் மக்கள் தாக்கப்பட்டனர். இதில் ஒரு பையன் மருத்துவமனையில் அனுமதி. இது குறித்து போலீசில் எவ்வித நடவடிக்கையும் இல்லை. இது பற்றி செய்தி எவ்வித செய்தித்தாளிலும் தரவில்லை. . | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | சசிகலா CHRM |
| 117. | 15.04.09 | **மதுரை மாவட்டம்:** பி.ஆர்.ஏ காலனியைச் சேர்ந்த சரஸ்வதியின் கணவர் இறந்து விட்டார். மகள் பானுமதி மற்றும் மருமகன் பாஸ்கரன் இருவரையும் தன்னோடு வைத்திருந்தார். பாஸ்கரன் தினமும் குடித்து விட்டு வந்து தகராறு. இது குறித்து சரஸ்வதி தட்டி கேட்டதற்கு பாஸ்கரன் அடித்துள்ளார். சரஸ்வதி மருத்துவமனையில் அனுமதி. போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 118. | 15.04.09 | **மதுரை மாவட்டம்:** கோரிப்பாளையத்தை சேர்ந்த பாலமுருகன் அப்பகுதியை சேர்ந்த பொன்ராம் என்பவரது மகள் பூங்கொடியும் காதலித்துள்ளனர். இந்த தகவல் அறிந்த குடும்பத்தார் பூங்கொடியை அடித்து சித்ரவதை. இது குறித்து பாலமுருகன் போலீசில் புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. இது பற்றி கோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளனர். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 119. | 15.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** இராசபாளையம் தேசிகாபுரம் குடியிருப்பை சேர்ந்த சித்திரன் மனைவி லட்சுமி. இருவருக்கும் அடிக்கடி குடும்ப தகராறில் லட்சுமி கழுத்தை நெறித்து கொலை. இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 120. | 15.04.09 | **திருவாரூர் மாவட்டம்:** நீடாமங்கலம் அருகில் உள்ள வாசுதேவமங்கலம் பகுதியில் வெண்ணாற்றில் அரசு அனுமதியின்றி மணல் அள்ளிய லாரியை காவல் துறையினர் பறிமுதல் செய்தனர். | மணல் கடத்தல் | தமிழ்ஓசை |
| 121. | 15.04.09 | **மதுரை மாவட்டம்:** பேரையூர் தாலுகா, எடுமலை ஆத்தாங்கரைப்பட்டி மாயன் மகன் சுகுமார். இந்து பள்ளர் வகுப்பை சேர்ந்த லாரி டிரைவரான சுகுமார் தனது உறவினர்களுடன் லாரியில் இராமேஸ்வரம் சென்றிருந்தார். உறவினர்கள் கோயிலுக்கு போயிருந்த வேலையில் சுகுமார் லாரியில் தூங்கி கொண்டிருந்தார். அங்கு வந்த போக்குவரத்து காவல் ஆய்வாளர் காமராஜர் பூட்ஸ் காலால் அடித்து உள்ளார். | தலித்துகள் மீதான வன்முறை. | உதவும் குரல் |
| 122. | 16.04.09 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டியை சேர்ந்த பேச்சியம்மாளின் வயது 16 அப்பகுதியைச் சேர்ந்த இராஜேந்திரன் என்பவர் திருமணம் செய்வதாக கூறி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது குறித்து போலீசில் புகார் செய்தும் நடவடிக்கை இல்லை. இது பற்றி கோர்டில் மனுதாக்கல் செய்துள்ளார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 123. | 16.04.09 | **மதுரை மாவட்டம்:** நாகமலைபுதுக்கோட்டை அருகே கீழக்குடியை சேர்ந்த குணசேகரன் மனைவி முத்துலட்சுமி. குணசேகரனுக்கு சொந்தமான பூர்விக இடத்தை விற்றதில் ஏற்பட்ட பிரச்சனையில் குணசேகரன் முத்துலட்சுமியை அரிவாளால் வெட்டியுள்ளார். இதை தட்டிக் கேட்ட மாமியார் நாகம்மாளையும் அரிவாளால் வெட்டியுள்ளார். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 124. | 16.04.09 | **மதுரை மாவட்டம்:** சக்கிமங்கலம் பகுதியைச் சேர்ந்த காட்டுநாயக்கர் சமூகத்தை சேர்ந்த மக்கள் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். | காட்டுநாயக்கர் மக்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 125. | 16.04.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனி, புதுநகர் தட்டான்குளத்தை சேர்ந்தவர் நாகேந்திரன் மனைவி வீரசின்னு (27) குடும்ப சூழ்நிலை காரணமாக தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 126. | 16.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** திருச்சுழி தாலுகா வீரசோழம் பகுதியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் மனைவி உமாதேவியை அவரது கணவர் மட்டும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணைக் கேட்டு சித்திரவதை செய்துள்ளனர். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 127. | 16.04.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** கோவில்பட்டி தாலுகா, பசுவன்த்தனையரோடு தலித் சமூகத்தை சேர்ந்த புத்திரைவானை அப்பகுதியைச் சேர்ந்த ஆதிக்க சாதியினர் சோலையப்பன் செருப்பில் தாக்கியுள்ளார். இது பற்றி இதுவரை வழக்கு தொடரப்படவில்லை. | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | முனியராஜ், RMA |
| 128. | 16.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் ராசி தெருவைச் சேர்ந்த மைக்கேல்ராஜ். உடல் ஊனமுற்ற தலித் சமூகத்தைச் சேர்ந்த இவரை சாத்தூர் எஸ்.ஐ சந்தோஸ்குமார் பொய் வழக்கு பதிவு செய்து அடித்து சித்திரவதை செய்ததுடன் சாதி பெயர் கூறி திட்டியுள்ளார். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | முனியராஜ்,. RMA |
| 129. | 16.04.09 | **வேலூர் மாவட்டம்:** குடியாத்தம் தாலுகா, நத்தியப்பேட்டு கிராமத்தை சேர்ந்த நாகராஜ் மகள் தவமணியை அப்பகுதியைச் சேர்ந்த இசதேஸ்வரன் கடத்தி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கரன் RMA |
| 130. | 16.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தைச் சேர்ந்த லட்சுமிகாந்தன், தலித் மக்கள் ஒருவர் கொல்லப்பட்டத்தை கண்டித்து சுவரொட்டி ஒட்டியதால் காவல் துறையினர் அவர் மீது பொய் வழக்கு பதிவு செய்து சிறை பிடித்துள்ளனர். | தலித்துகள் மீதான வன்முறை | முனியராஜ், RMA |
| 131. | 16.04.09 | **சிவகங்கை மாவட்டம்:** அம்மாகண்ணு 15 வயது மகள் சென்னையில் தொழிலதிபரின் வீட்டின் வேலை பார்த்து வந்த இப்பெண்ணிற்கு முறையான சம்பளம் தரப்படவில்லை. அப்பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். இது குறித்து அம்மாகன்னு சென்னை காவல்நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி, RMA |
| 132. | 16.04.09 | **சென்னை மாவட்டம்:** ஸ்ரீபெரும்புத்தூர் அடுத்த திருமங்கலம் கண்டிகை கிராமத்தை சேர்ந்த மாதவன் மகள் அஞ்சலி தனது ஆண் நண்பர்களுடன் பேசியுள்ளார். இதை அஞ்சலி தோழி பிரியா தட்டிக் கேட்டுள்ளார். இதில் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இது குறித்து பிரியாவின் தாய் அஞ்சலி வீட்டிற்கு வந்து தகாத வார்த்தைகளால் கூறி ஆடையை கிழித்து அவமானப்படுத்தியுள்ளனர். இதனால் அவமானம் அடைந்த அஞ்சலி மண்ணெணைய் ஊற்றி தீக்குளித்தார். இது | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 133. | 16.04.09 | **சென்னை மாவட்டம்:** தண்டையார்பேட்டை சேனியம்மாள் கோயில் தெருவைச் சேர்ந்த பீட்டர் மகள் அமுதா தலையில் இருந்த கட்டியை அகற்றுவதற்காக ஸ்டாலின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அமுதா மயங்கி விழுந்து இறந்தார். இதையடுத்து அமுதாவின் உறவினர்கள் மருத்துவமனையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியுள்ளனர். | தவறான சிகிச்சை | டைட்டி RMA |
| 134. | 16.04.09 | **திருவள்ளுவர் மாவட்டம்:** ஆர்.டி.ஒ பாலசுப்பிரமணியன் பூந்தமல்லி அருகே நள்ளிரவில் திருட்டு மணல் எடுப்பவர்களை கண்காணிக்கச் சென்ற ஆர்.டி.ஒ பாலசுப்பிரமணியத்தை அங்கிருந்தவர்கள் தாக்க முயன்றுள்ளனர். இது குறித்து 6 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை. | மணல் திருட்டு | டைட்டி RMA |
| 135. | 16.04.09 | **சென்னை மாவட்டம்:** ஊத்துக்கோட்டை அடுத்த முக்கரம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த மனைவி கோமதி ஜெகன் தனியார் அட்டை கம்பெனியில் வேலை செய்து வருகிறார். ஜெகன் மனைவி வீட்டில் தனியாக இருந்த பொழுது ஜெகன் கம்பெனி உரிமையாளர் ராதாநாயுடு தகாத முறையில் நடந்ததுடன் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது குறித்து போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 136. | 16.04.09 | **சென்னை மாவட்டம்:** சூளைமேடு சண்முகநாதர் ரோட்டில் வசிக்கும் நிரஞ்சன் குமார் மனைவி சங்கீதா. திருமணம் ஆன இரண்டு மாதங்களிலே கர்ப்பமான சங்கீதாவை கருக்கலைப்பு செய்ய நிரஞ்சன் கூறியுள்ளார். இதனால் இருவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் சங்கீதா பெற்றோர் வீட்டில் தங்கியிருந்தார். சங்கீதாவுக்கு குழந்தை பிறந்தவுடன் நிரஞ்சன்குமார் வந்து பார்த்துள்ளார். பின் கிணற்றில் எறிந்து கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண் சிசு கொலை | டைட்டி, RMA |
| 137. | 16.04.09 | **சென்னை மாவட்டம்:** பெரம்பூர் புளியந்தோப்பை சேர்ந்த ஜாபர்கான் பேட்டையைச் சேர்ந்த அப்துல் ரசாக் மனைவி அபிதாபேகம். 7 மாதம் கர்ப்பினியான அவரை கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணைக் கேட்டு கொடுமை. இது குறித்து அபிதா போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 138. | 16.04.09 | **சென்னை மாவட்டம்:** ஆலந்தூர் வட்டம் உள்ளகரத்தை சேர்ந்த ஜெய்சூர்யா (17) தாய் | குழந்தை திருமணம். | டைட்டி RMA |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மகன் மகள் வித்யா. 17 வயதுடைய ஜெய்சூர்யாவை அவரது பெற்றோர் மற்றும் உறவினர்கள் கட்டாயப்படுத்தி தாய் மகன் மகள் வித்யாவை திருமணம் செய்து வைத்தனர். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு. | | |
| 139. | 16.04.09 | **சென்னை மாவட்டம்:** தாம்பரம் அருகே சேலையூர் ராஜகீழ்பாக்கம் வனகாதீர்த்த விநாயகர் தெருவில் வசிக்கும் தர்மலிங்கம் மகள் காமாட்சியும் அப்பகுதியைச் சேர்ந்த ராஜா என்பவரும் காதலித்துள்ளனர். இதை பெற்றோர் எதிர்த்துள்ளனர். இந்நிலையில் இராஜா காமாட்சியை காரில் கடத்தி சென்றுள்ளார். இது குறித்து தர்மலிங்கம் போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 140. | 16.04.09 | **சென்னை மாவட்டம்:** கோட்டூர்புரத்தில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் வசிக்கும் பழனி (எ) குட்டிபழனி. மது அருந்திவிட்டு படுத்திருந்தார். அவ்வழியில் வந்த போலீசார் விசாரணைக்கு அழைத்து சென்றுள்ளனர். இந்நிலையில் மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து சென்றுள்ளார். ஆனால் பழனி மருத்துவ பரிசோதனைக்கு மறுத்துள்ளார். ஆகையால் காவல் நிலையம் அழைத்துச் சென்றுள்ளனர். பின் பழனியின் தந்தையுடன் வீட்டிற்கு அனுப்பியுள்ளனர். வீட்டிற்குச் சென்ற சிறிது நேரத்திற்குள் பழனி இறந்துள்ளார். உறவினர்கள் காவல் நிலையத்தை முற்றுகை. | காவல் நிலைய மரணம் | டைட்டி RMA |
| 141. | 16.04.09 | **சென்னை மாவட்டம்:** ஆவடி காமராஜர் நகர் 9வது தெருவைச் சேர்ந்த முரளி மனைவி தரணி. முரளி வீட்டருகே கழிவுநீர் கால்வாயில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | மர்மசாவு | டைட்டி RMA |
| 142. | 16.04.09 | **திருவள்ளுவர் மாவட்டம்:** மப்பேடு கண்ணூர் கிராமத்தைச் சேர்ந்த சீனிவாசன் மகள் சாவித்திரி (15) 10ம் வகுப்பு படித்து வந்த சாவித்திரி பள்ளிச் சென்றவர் வீடு திரும்பவில்லை. இது குறித்து சீனிவாசன் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 143. | 16.04.09 | **திருவள்ளுவர் மாவட்டம்:** ஈக்காடு விகே.எம் நகரைச் சேர்ந்த சரண்யா (எ) பிரியங்கா (17) கடைக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை. இது குறித்து போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 144. | 16.04.09 | **திருவள்ளுவர் மாவட்டம்:** அரண்வாயல் குப்பத்தைச் சேர்ந்த ராமலிங்கம் மனைவி வள்ளியம்மாள் 3வது பெண் குழந்தை பிறந்ததால் 62 நாட்களே ஆன பெண் | பெண் சிசு கொலை | டைட்டி RMA |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | குழந்தையை கழுத்தை நெறித்து கொலை செய்துள்ளார். இது பற்றி வள்ளியம்மாள் போலீசில் புகார். | | |
| 145. | **16.04.09** | **திருவாரூர் மாவட்டம்:** கூடுவாஞ்சேரி அடுத்துள்ள வள்ளலார் நகரைச் சேர்ந்த முகமது அலி மனைவி ரஜினாபேகம் மகள் நவுசியா (2) பிரார்த்தனைக்காக தர்கா சென்ற முகமது அலி ரஜினா பேகத்தின் 2 வயது மகள் நவுசியாவை ஊனமுற்ற பெண் கடத்திச் சென்றுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண் குழந்தை கடத்தல் | டைட்டி RMA |
| 146. | **16.04.09** | **சென்னை மாவட்டம்:** கோடம்பாக்கம் அருகே சிறுசேரி சிப்காட்டில் உள்ள மணிவண்ணன் மனைவி சங்கீதா. கர்ப்பினியான சங்கீதாவை கணவர் மணிவண்ண வரதட்சணை கேட்டு சித்திரவதை செய்துள்ளார். இதனால் மனமுடைந்த சங்கீதா ஆசிட் குடித்து தற்கொலை செய்து கொண்டார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 147. | **16.04.09** | **சென்னை மாவட்டம்:** ஆவடி அடுத்த பட்டாபிராம் முல்லை நகரைச் சேர்ந்த ராஜா மனைவி அமுதா. அமுதா எதிர் வீட்டில் வசிக்கும் ராஜேந்திரன் மனைவி மலர்விழிக்கும் தெருச் சண்டை நடக்கும். இந்நிலையில் சம்பவத்தன்று நடந்த சண்டையில் மலர்விழி தரக்குறைவாக திட்டியதால் மனமுடைந்த மலர்விழி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 148. | **16.04.09** | **சென்னை மாவட்டம்:** பூந்தமல்லி மாங்காடு அடுத்த சித்தூர் இந்திராநகரைச் சேர்ந்த வனத்தாயி. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் வனத்தாயி தனது உறவினர் கனிக்கொடி ரூ. 20,000 கடன் பெற்றுள்ளார். பின் வனத்தாய் கனிக்கொடியின் கடன் பணத்தை கேட்டுள்ளார். இதற்கு கனிக்கொடி அவரது உறவினர்களுக்கு வந்த வனத்தாயை அடித்து உதைத்துள்ளனர். இது குறித்து போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 149. | **16.04.09** | **சென்னை மாவட்டம்:** அம்பத்தூர் அடுத்த பட்டரவாக்கம் பகுதியைச் சேர்ந்த குயினிமேரி (20. குயினிமேரியை அப்பகுதியைச் சேர்ந்த ராஜபாண்டி 4 வருடமாக காதலித்துள்ளார். இதில் குயின்மேரி கர்ப்பமானார். குயின்மேரி திருமணம் செய்ய வற்புறுத்தியுள்ளார். ஆனால் ராஜபாண்டி தலைமறைவு. இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 150. | **16.04.09** | **சென்னை மாவட்டம்:** கோடம்பாக்கம் அக்பராபாத் முதல் தெருவைச் சேர்ந்த | சொத்து பிரச்சனை | டைட்டி RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கிருஷ்ணாராவின் ரூ. 6 கோடி சொத்துக்களை அபகரிக்க அவரது மனைவியும், உறவினர்களும் கழுத்தை நெறித்து கொலை செய்ய முயற்சி. கிருஷ்ணாராவ் போலீசார் புகார். | | |
| 151. | **16.04.09** | **சென்னை மாவட்டம்:** ஆவடி காமராஜர் நகர் 9வது தெருவைச் சேர்ந்த சாந்தி அப்பகுதியைச் சேர்ந்த செல்வம் என்பவருடன் தொடர்பு வைத்திருந்தார். சம்பவத்தன்று குடிபோதையில் சாந்தி வீட்டுக்கு சென்ற செல்வம் தகராறு செய்துள்ளார். இதில் ஆத்திரம் அடைந்த செல்வம் அரிவாளால் சாந்தியை வெட்டி உள்ளார். சாந்தி மருத்துவமனையில் அனுமதி. போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 152. | **16.04.09** | **சென்னை மாவட்டம்:** ஆவடி அடுத்த திருநின்றவூர் முருகேசன் நகர் 6வது குறுக்குத் தெருவில் வசிக்கும் நூர்தீன் மனைவி சாகீன் (32). சாகீன் வீட்டு உரிமையாளர் பாவா வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தவறாக நடந்து கொள்ள முயற்சி. இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 153. | **16.04.09** | **சென்னை மாவட்டம்:** ஆவடி பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்த கிருஷ்ணன் (31) மனைவி காமாட்சி (28) இருவருக்கும் ஏற்பட்ட தகராறில் இருவரும் பிரிந்து வாழ்கின்றனர். இந்நிலையில் காமாட்டசி வேலைக்கு செல்லும் போதொல்லாம் கிருஷ்ணன் பின் தொடர்ந்து வந்து கேலி, கிண்டல் செய்வதுடன் ஆபாச வார்த்தைகளால் திட்டியுள்ளார். கொலை செய்து விடுவதாகவும் மிரட்டல் விடுத்துள்ளார். இது பற்றி காமாட்சி போலீசில் புகார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 154. | **17.04.09** | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் முகமதுசாபுரத்தை சேர்ந்தவர் செங்கிஸ்தான் மனைவி ஷகர்பானு (30) செங்கிஸ்தானுக்கு குடிப்பழக்கம் இருந்து வந்துள்ளது. இதனால் கணவன் மனைவியிடையே குடும்பத் தகராறு இருந்து வந்துள்ளது. இந்நிலையில் சம்பவத்தன்று நிறைமாத கர்ப்பினியான ஷகர்பானுவை செங்கி1தான் வயிற்றில் மிதித்து கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 155. | **17.04.09** | **திருவள்ளுவர் மாவட்டம்:** பேரமங்கலம் அருகேயுள்ள காலனியில் வசித்து வரும் ரமேஷ் மனைவி சரளா (26). சரளாவிற்கும் அவரது நாத்தனாவிற்கும் அடிக்கடி வாய்த்தகராறு ஏற்படுவதுண்டு. சம்பவத்தன்று வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் சரளா தனது 3 பெண் குழந்தைகளுடன் மண்ணெணைய் ஊற்றி தீ வைத்து கொண்டார். இதில் 4 பேரும் | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உயிரிழந்தனர். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 156. | 17.04.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** பாபநாசம் அருள்மொழிபேட்டை கிராமத்தை சேர்ந்த அருணாசலம் மகன் பிரவீன்குமார் அண்ணன் நவீன்குமார் 8ம் வகுப்பு வரை படித்தவர். அதற்கு மேல் படிப்பு ஏறவில்லை என்பதால் வேலைக்கு சென்றார். அதனால் அருணாசலம் நவீன்குமார் புறக்கணித்துள்ளார். பிரவீன்குமாரை கம்பியால் தாக்கியதில் உயிரிழந்தார். இது பற்றி அருணாசலம் போலீசில் புகார். | | மாலைமலர் |
| 157. | 17.04.09 | **சென்னை மாவட்டம்:** அம்பத்தூர் அடுத்த சண்முகாபுரம் இந்திராநகர் திருவள்ளுவர் நகரைச் சேர்ந்த சத்தியசீலன் மகள் தேன்மொழி (19). தேன்மொழியை அப்பகுதியைச் சேர்ந்த செந்தில் என்பவர் ஆபசமாகப் பேசி கேலி, கிண்டல் செய்துள்ளார். இதை தட்டிக் கேட்ட சத்தியசீலனை உருட்டுக் கட்டையால் தாக்கியுள்ளார். இதில் காயமடைந்த சத்தியசீலன் மருத்துவமனையில் அனுமதி. போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 158. | 17.04.09 | **திருவள்ளுவர் மாவட்டம்:** ஊத்துக்கோட்டை அடுத்த கூனிப்பாளையத்தை சேர்ந்த மகாலிங்கம் மனைவி சுஜாதா. சென்னையில் கூலி வேலை பார்த்து வரும் மகாலிங்கம், அப்பகுதியில் உள்ள பெண்ணை 2வது திருமணம் செய்துள்ளார். இது பற்றி சுஜாதா போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | டைட்டி RMA |
| 159. | 17.04.09 | **வேலூர் மாவட்டம்:** குடியாத்தம் காமாட்சியம்மன் பேட்டையைச் சேர்ந்த சண்முகம் மனைவி சாவித்திரி. சண்முகம் மற்றும் சாவித்திரி 20 ஆண்டுகளுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு குழந்தை இல்லை. இந்நிலையில் மனைவியின் நடத்தையில் சந்தேகமடைந்த சண்முகம் சாவித்திரியை உயிருடன் எரித்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 160. | 17.04.09 | **வேலூர் மாவட்டம்:** கலசப்பாக்கம் அடுத்த துகிஞ்சாபுரம் ஒன்றியம் நார்த்தாம்பூண்டி மதுரா வட ஆண்டால்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவர் சாவித்திரி (53) கணவரால் கைவிடப்பட்ட சாவித்திரி கணவரால் கைவிடப்பட்டோருக்கான உதவி தொகை வேணடும் என கோரி நார்த்தம் பூண்டி வி.ஏ.ஓ சம்பத்திடம் மனு கொடுத்துள்ளார். இது சம்பந்தமாக சம்பந்த் ரூ. 2 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார். இதுப்பற்றி சாவித்திரி போலீசில் புகார். | லஞ்ச ஊழல் | பாஸ்கர் RMA |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 161. | 17.04.09 | **வேலூர் மாவட்டம்:** சோளிங்கன் ஊராட்சி ஒன்றியம் வடகப்பந்தாங்கல் கிராமத்தில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ண நிதியுதவி நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள். அரசு நிதியுதவி பெறும் பள்ளியில் ஆசிரியர் பணி நியமனத்தில் கல்வி அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக கூறி ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியினர் மாவட்ட அலுவலத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். | லஞ்ச ஊழல் | பாஸ்கர் RMA |
| 162. | 17.04.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவள்ளுவர் சிறை அருகே பிறந்து ஒரு நாளே ஆன ஆண் சிசுவை நாய்கள் கடித்து குதறியுள்ளது. இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | ஆண் சிசு கொலை | பாஸ்கர் RMA |
| 163. | 18.04.09 | **புதுச்சேரி மாநிலம்:** திருப்புராயப்பேட்டையைச் சேர்ந்த செல்வம் மனைவி கற்பகம். செல்வம் குடிப்பழக்கம் உள்ளவர். இதனால் குடியை மறக்க கற்பகம் பக்கத்தில் உள்ள போலி சாமியார் லோகநாதனிடம் சந்தித்துள்ளார். இந்நிலையில் மர்மமான நிலையில் தற்கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 164. | 18.04.09 | **மதுரை மாவட்டம்:** நிலையூர் பகுதி மக்கள் நிலையூர் பஸ் நிலையம் அருகே உள்ள ரேஷன் கடையில் 60 மூடை ரேஷன் அரிசி கடத்தியது கண்டுப்பிடிக்கப்பட்டது. | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 165. | 18.04.09 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் அருகே தென்கரையைச் சேர்ந்த மகேந்திரன் மகள் மகேஸ்வரி (8) பெயர் மாற்றப்பட்டுள்ளது. 8 வயதுடைய மகேஸ்வரியை அப்பகுதியைச் சேர்ந்த உமாமகேஸ்வரன், கணேசன், கலைமாமணி ஆகியோர் கடத்திச் சென்று விட்டதாக போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 166. | 18.04.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** திருப்பத்தூர் அருகே உள்ள மகிபாலன்பட்டி சேர்ந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த முத்து பழனிக்கும், ஊராட்சி மன்றத் தலைவருக்கும் இடையே கண்மாய் மீன் குத்தகை எடுப்பது சம்மந்தமாக ஏற்பட்ட தகராறில் நாகராஜ் மற்றும் 11 பேர் சேர்ந்து சாதி பெயர் சொல்லி திட்டியதுடன் தாக்கியுள்ளனர். இது பற்றி போலீ புகார். வழக்கு பதிவு. | தலித்துகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 167. | 18.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** திமுக தொண்டர்கள் தேர்தல் பணிக்காக திமுக செயலாளர் கனிராஜாவுக்கும் ஒன்றிய கவுன்சிலர் கணபதிக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் போலீசார் தடியடி நடத்தி கலைத்தனர். | காவல் நிலைய வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 168. | **18.04.09** | **மதுரை மாவட்டம்:** விளாங்குடியைச் சேர்ந்த அகமது அபுதாகீர் மனைவி இஸ்மாயில் பீவியை அவரது கணவர் வரதட்சணைக் கேட்டு சித்திரவதை செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | மாலைமலர் |

மக்கள் கண்காணிப்பகம்